

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023 நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நிதியுதவியாக முதற்கட்டமாக ரூ.1.50 கோடிக்கான காசோலையினை தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் சேர்மன் சாம்பியன் ஷிப் கமிட்டி என். இராமச்சந்திரன் அவர்களிடம் நேற்று முன்தினம் (22.05.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் பொது மேலாளர் (நிர்வாகம்) வே.மணிகண்டன், அரசு அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் இராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023–24ஆம் நிதியாண்டின் அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் (22.5.2023) செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர், சென்னை வெளிவட்டச் சாலையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் தனியார் ஆம்னி பேருந்துகள் நிறுத்துவதற்கான இடத்தினை தேர்வு செய்வது தொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சட்டமன்ற உறுப்பினர்கள் (தாம்பரம்) எஸ்.ஆர்.ராஜா, (பல்லாவரம்) இ.கருணாநிதி, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி , செங்கல்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் இரா.மேனுவல்ராஜ், முதுநிலைத் திட்ட அமைப்பாளர் திருமதி.அனுசுயா மற்றும் துறை அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## கோடி கோடியாய்

# சொத்துக்குவித்த அ.தி.மு.க. அமைச்சர்கள்!

## குற்றப்பத்திரிகை தாக்கல்!

சென்னை, மே 24-

அ.தி.மு.க .ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கருக்கு எதிராக புதுக்கோட்டை தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத் துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. விஜயபாஸ்கர் அமைச்சராக இருந்த 2016 ஏப்ரல் 1 முதல் 2021 மார்ச் 31 வரையிலான காலத்தில், 27 கோடியே 22 லட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடாக சொத்து சேர்த்ததாக, வழக்குப்பதிவு செய்யப்பட்டதாக கூறியுள்ளது.

அதனடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் 56 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு, விஜயபாஸ்கர், அவரது மனைவி ரம்யாவின் உடந்தையுடன் அவரது பெயரிலும், குடும்பத்தினரின் பெயரிலும் ராசி புளூ மெட்டல்ஸ், V Infrastructure. ராசி என்டர்பிரைசஸ் ஆகிய பெயர்களில் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், இயந்திர தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் ஆபரணங்கள் என முதலீடு செய்து மொத்தம் 35 கோடியே 79 லட்சத்து 90 ஆயிரத்து 81 ரூபாய் அளவிற்கு வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை முடிவடைந்த நிலையில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் விஜயாஸ்கர் மற்றும் அவரது மனைவி ரம்யா ஆகியோர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**கே.பி.அன்பழகன்!**

அதிமுக ஆட்சியில் உயர் கல்வித் துறை அமைச்சராக இருந்தவர் கே.பி.அன்பழகன். இவர் அமைச்சராக இருந்த 2016 ஏப்ரல் 1 முதல் 2021 மார்ச் 31 வரையிலான காலத்தில் அவரது பெயரிலும், அவரது மனைவி மல்லிகா, மகன்கள் சசிமோகன், சந்திரமோகன் ஆகியோர்கள் பெயரில் மொத்தம் 11 கோடி ரூபாய் அளவிற்கு வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக, வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நடந்த விசாரணை யில், 58 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

அன்பழகன் அவரது உறவினர்களான ரவிசங்கர், சரவணன், சரவணக்குமார் மற்றும் நெருங்கிய கூட்டாளிகளான மாணிக்கம், மல்லிகா, தனபால் ஆகியோர் உடந்தையுடன் அவரது பெயரிலும், அவரது குடும்பத்தினர் பெயரிலும் நிலங்கள், தொழில் முதலீடு, வங்கி இருப்புகள், நிலம், இயந்திர தளவாடங்கள், ஆபரணங்கள், வாகனங்கள் என சொத்துக்களாகவும், முறைகேடாக பெற்ற பணத்தை அவருக்கு சொந்தமான சரஸ்வதி பச்சியப்பன் கல்வி அறக்கட்டளைக்கு அனுப்பியதன் வழியாகவும் மொத்தம் 45 கோடியே 20 லட்சத்து 53 ஆயிரத்து 363 ரூபாய் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாக, தருமபுரி தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் லஞ்ச ஒழிப்புத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

## முதல்வர் வெளிநாடு பயணம்!

முதல் பக்கத் தொடர்ச்சி....

இந்த உறவை மேலும் மேம்படுத்தும் வகையில்தான், முதலமைச்சர் அவர்கள் முதலீட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்கி ஜப்பான் செல்கிறார்கள். அங்கு முன்னணி தொழில்துறைத் தலைவர்களையும், அரசு அதிகாரிகளையும் சந்தித்து, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று, தமிழ்நாட்டில் முதலீடு மேற்கொள்ள வருமாறு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுக்க இருக்கிறார்கள்.

ஜப்பான் நாட்டில், ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு மாநாடும் நடைபெற உள்ளது. பல்வேறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட உள்ளன.

இதுவரை ஜப்பான் சென்றுள்ள அரசுக் குழுக்கள் டோக்கியோ மட்டுமே சென்று வந்துள்ளனர். ஓசாகாவில் இந்திய வம்சாவளியினர் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இங்கு பல முன்னணித் தொழில் நிறுவனங்களும் அமைந்துள்ளன. எனவே, ஓசாகா நகருக்கும் வருகை தரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று முதல்முறையாக ஓசாகா நகருக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இந்தக் குழு செல்ல உள்ளது.

ஓசாகாவில், ஜப்பான் வெளியுறவு வர்த்தக நிறுவனமான, ஜெட்ரோ (JETRO) நிறுவனத்துடன் இணைந்து அங்கு நடைபெற உள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள உள்ளார்கள்.

மேலும் முக்கிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளைச் சந்தித்து தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்க உள்ளார்கள். அதனைத் தொடரந்து ஓசாகா வாழ் இந்திய சமூகத்தினர் அளிக்கும் வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ள உள்ளார்கள்.

டோக்கியோ நகரில் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷீமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ அவர்களை முதலமைச்சர் அவர்கள் சந்திக்க உள்ளார்கள். மேலும், 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் கலந்துகொள்கிறார்கள்.

கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளபட உள்ளன. மேலும் அங்குள்ள மேம்பட்ட தொழில் மையத்தைப் பார்வையிட உள்ளார்கள்.

தமிழ்நாட்டிற்கும், ஜப்பானுக்கும் இடையே நீண்ட நெடிய வரலாற்று உறவு இருந்து வருகிறது. இந்த உறவு மேலும் வலுவடையும் வகையில், இந்த அரசு முறைப் பயணம் அமைந்திடும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பெற்று – சிறப்புரை!**

சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு நேற்று (23.5.2023) காலை 9.45 மணியளவில் பயணம் மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் பெருமக்கள், கழக முன்னணியினர் திரளாகத் திரண்டு வாழ்த்துத் தெரிவித்தனர். வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும்

## தி.மு.கழக ஆட்சியில் 14 லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள்!

### பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு தகவல்!

சென்னை, மே 24-

2022 - 23 நிதியாண்டில் தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14 லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் பதிவுத் தரவு காட்டுகிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக 18 - 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. உற்பத்தி, மின்னணு வியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்டன

2022-23 நிதியாண்டில் (FY) தமிழ்நாட்டின் முறைசார் துறையில் 14,05,171 வேலைகள் உருவாக்கப்பட்டன, இது 2021-22 நிதியாண்டில் 12,84,986 வேலைகளாக இருந்து சுமார் 9.4% அதிகரித்துள்ளது.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (EPFO) செய்யப்பட்ட புதிய நிகர பதிவுகளின் எண்ணிக்கையில் வேலை உருவாக்கம் அளவிடப்படுகிறது. 2022-23 நிதியாண்டுக்கான தற்காலிக ஊதியத் தரவை மே 20 அன்று EPFO வெளியிட்டது. தமிழ்நாட்டில், 18- 21 வயதுக்குட்பட்டவர்களில் அதிகபட்சமாக காணப்பட்டது, 2022-23 இல் 3,76,872 வேலைகள் உருவாக்கப்பட்டன. . 22-25 வயதிற்குட்பட்ட பிரிவில், 2022-23ல் 3,6,8981 பணிகளும், 35 வயதுக்கு மேற்பட்டவர்களில் 2,44,891 பணிகளும் சேர்க்கப்பட்டன.

29-35 வயதிற்குட்பட்ட பிரிவில், 2,35,006 வேலைகள் சேர்க்கப்பட்டன, அதைத் தொடர்ந்து 2628 வயது வரம்பில் 1,63,658 வேலைகள் சேர்க்கப்பட்டனர், தரவு காட்டுகிறது. 2022-23ல் 18 வயதுக்கு குறைவானவர்கள் 15,763 வேலைகளை கூடுதலாகக் பெற்றனர். தேசிய அளவில், 2022-23ல் EPFO ஆல் சுமார் 1.39 கோடி நிகர உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இது 2021-22ல் 1.22 கோடி நிகர உறுப்பினர்களில் இருந்து 13.22% அதிகரித்துள்ளது.

உற்பத்தி, மின்னணு வியல் மற்றும் ரியல் எஸ்டேட் போன்ற பிரிவுகள் மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டன. இருப்பினும், உலகளாவிய காரணிகளால் ஜவுளி மற்றும் தோல் போன்ற முக்கிய வேலைவாய்ப்பை உருவாக்கும் துறைகளில் அழுத்தம் உள்ளது என்று பொன் ப்யூர் கெமிக்கல்ஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரும், MSME மற்றும் எளிதாக செய்வதற்கான இந்திய தொழில் கூட்டமைப்பு துணைக்குழுவின் தலைவருமான எம். பொன்னுசாமி கூறினார்.

மார்ச் மாதத்தில், அதிகபட்ச நிகர உறுப்பினர் சேர்க்கைக்கான முதல் ஐந்து மாநிலங்கள் மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, ஹரியானா மற்றும் குஜராத் ஆகும். இந்த மாநிலங்கள் இணைந்து 58.68% உறுப்பினர்களை சேர்த்துள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்தில் அனைத்து மாநிலங்களிலும், மகாராஷ்டிரா 20.63% நிகர உறுப்பினர்களைச் சேர்த்து அட்டவணையில் முதலிடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பங்களிப்பு 10.83% என்றும் அது மேலும் கூறியது.

EPFO தரவு முறையான வேலைவாய்ப்பின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உருவாக்குகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ். இயக்குநர் கே.ஆர். சண்முகம் தெரிவித்தார். ஊழியர்களின் பதிவுகளை புதுப்பித்தல் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருப்பதால், ஊதிய தரவு தற்காலிகமானது. அதனால் ஒவ்வொரு மாதமும் தரவு புதுப்பிக்கப்படும் என்று தொழிலாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2022-23 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் 13.2% ஆக இருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் நிகர வளர்ச்சி 9.4 சதவிகிதம் ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### நடிகர் சரத்பாபு ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் இன்றும்

## தமிழ் ரசிகர்களால் நினைவுகூரப்படுகிறது!

### நடிகர் சரத்பாபு மறைவுச் செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 24-

நடிகர் சரத்பாபு அவர்கள் (வயது 71) நேற்று முன்தினம் இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம். செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் நடிகர் சரத் பாபு அவர்கள் ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் இன்றும் தமிழ் ரசிகர்களால் நினைவு கூரப்படுகிறது என்று குறிப்பிட்டார்.



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**தென்னிந்தியத் திரையுலகில் தனக்கெனத் தனி முத்திரை பதித்து வலம் வந்த நடிகர் சரத்பாபு அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**நிழல் நிஜமாகிறது, முள்ளும் மலரும், உதிரிப்பூக்கள், வேலைக்காரன், அண்ணாமலை, முத்து போன்ற ஏராளமான திரைப்படங்களில் அவர் ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் இன்றும் தமிழ் இரசிகர்களால் நினைவு கூரப்படு கிறது.**

**அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர், திரையுலகினர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### காஞ்சிபுரம் – திருப்பெரும்புதூரில்

## சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதி - உணவகங்களில் ஆய்வு!

### அமைச்சர் கா.இராமச்சந்திரன் மேற்கொண்டார்

காஞ்சிபுரம், மே 24-

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் காஞ்சிபுரம் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகள், உணவகம், “ஆலயம்” பக்தர்கள் தங்கும் விடுதி அறைகள் ஆகியவற்றை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.இராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

(21.5.2023) அன்று திருப்பெரும் புதுாரில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு சொந்தமான ஓட்டலையும், காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல் மற்றும் ஆலயம் ஓட்டல்ஆகியவற்றை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.இராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

இதில் அமைச்சர் கா. இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலா பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத் தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் பொதுமக்களுக்கு தங்கும் வசதி சேவையை வழங்கி வருகின்றன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் மதுரை, கோவை, திருச்சி, சேலம், தஞ்சாவூர், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு உள்பட முக்கிய நகரங்களில் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து ஓட்டல்களின் தரத்தையும், சேவைகளையும் மேம்படுத்தி வருகின்றது. கொரோனாவிற்கு பிறகு 2021 ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு2023 ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் மட்டும் 2,67,773 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021ல் 11,53,36,719 ஆக இருந்து 2022ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023 ல் மார்ச் மாதம் வரை 3 மாத காலத்தில் 6,64,90,154 என உயர்ந்துள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்இன்று திருப்பெரும்புதூரில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு சொந்தமான ஓட்டலையும், காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஓட்டல் மற்றும் ஆலயம் ஓட்டல்ஆகியவற்றை ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்துஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், சுற்றுலா இயக்குநர்மற்றும்தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி. மாவட்ட வருவாய் அலுவலர் கோ. சிவருத்ரய்யா, காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி. மகாலட்சுமியுவராஜ், திருபெரும்புதூர் ஒன்றியக் குழுத் தலைவர் எஸ்.டி.கருணாநிதி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.